# சிந்தனைச் சிற்பி

## 2011



பவானி - திருமுறைக் கழகத்தின் சார்பில் த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களின் சமூகநலப் பணிகளைப் பாராட்டியும் ' மக்கள் சிந்தனைப் பேரவை ' என்ற அமைப்பை உருவாக்கி ' ஈரோடு புத்தகத் திருவிழா ' வின் மூலம் மக்களை வாசிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் பணியில் வலுவாக ஈடுபட்டதை அங்கீகரித்தும் ' மக்களுக்காகச் சிந்திப்போம், மக்களைச் சிந்திக்க வைப்போம் ' என்ற முழக்கத்தை அடிப்படையாக வைத்துத் தனது சேவைத் திட்டங்களை அமைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிற காரணத்தைக் கணக்கில் கொண்டும் இவருக்குச் ' சிந்தனைச் சிற்பி ' என்ற விருது வழங்கப்பட்டது.

இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி 02.01.2011 ஆம் தேதி பவானி- கூடுதுறை சங்கமேஸ்வரர் ஆலய வளாகத்தில் அமைந்த அரங்கில் நடைபெற்றது. பவானி தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ் என்.

பாலசுப்பிரமணியம் உள்ளிட்ட திருமுறைக் கழகத்தின் நிர்வாகிகள் அனைவரும் மேடையில் உள்ளனர்.

